**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.33/2017</u>**

பெயர்-திரு. வடிவேல் நாள்.05.12.2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. வழக்கு சொத்து ஆதியில் யார் யாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். ஆயிக்கவுண்டருக்கு பழைய க.ச.எண்.127/1A புதிய க.ச.எண்.127/1A2A வில் 4 ஏக்கர் 8 செண்ட் பாத்தியப்பட்டது. பழைய க.ச.எண்.127/1A என்பது ரீசர்வே எண் என்றும், பழைய சர்வே எண்.154, 155, 158 என்பது தான் சரி என்றும் சொன்னால் சரிதான்.

2. மேற்படி 4 ஏக்கர் 8 செண்ட்டில் ஆயிக்கவுண்டரும் அவரது மகன் முத்துசாமி கவுண்டரும் சேர்ந்து கடந்த 23.06.1980 தேதியில் பொதுவில் 2 ஏக்கர் 4 செண்ட் பூமியை அம்மாசை பண்டாரம் மகன் ராமபண்டாரம் என்பவருக்கு கிரயம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மீதி பொதுவில் உள்ள 2 ஏக்கர் 4 செண்ட்டை ஆயிக்கவுண்டரும் அவரது மகன் முத்துசாமிகவுண்டரும் சேர்ந்து மேற்படி தேதியிலேயே செவலையப்பன் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. மேற்படி கிரயம் நடக்கும் போது நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் மேற்படி ஆவண நகல்களை பார்த்து தான் நான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் ஆமாம். எனது தகப்பனாரும் அது பற்றி சொல்லியுள்ளார். பொதுவில் மேற்படி கிரயங்கள் பெற்றிருந்தாலும் மேற்படி 4 ஏக்கர் 8 செண்ட்டில் ராமபண்டாரம் மேபுற 2 ஏக்கர் 4 செண்ட்டையும் செவலையப்பன் கிழபுறம் 2 ஏக்கர் 4 செண்டையும் மேற்படி கிரய தேதியில் சுவாதீனம் எடுத்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

4. அதன் பிறகு 1981ல் ராமபண்டாரம் கிரயம் வாங்கிய மேபுற பூமிக்கு செவலையப்பன் பூமிக்கு கிழபுறம் உள்ள ரோட்டிலிருந்து செவலையப்பன் கிரயம் வாங்கிய 2 ஏக்கர் 4 செண்ட் பூமியின் வடபுற பகுதியில் 9 லிங்க்ஸ் அகலத்திற்கு கிழமேலாக ராமபண்டாரம் பூமி வரை அவர் தடபாத்தியம் கோரி செவலையப்பனிடம் கேட்டு அதன்படி 9 லிங்க்ஸ் அகலம் கொண்ட வண்டித்தடம் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 5 1/2 செண்ட் என்றால் அளந்து பார்த்தால் தான் தெரியும்.

5. மேற்படி 5 1/2 செண்ட் வண்டித்தடத்திற்காக ராமபண்டாரம் 3 மடங்காக 16 1/2 செண்ட் பூமியை செவலையப்பன் பங்கிற்கு சேர்ந்தார் போல் மேபுறம் தென்வடல் நீளியாக ராமபண்டாரம் செவலையப்பனுக்கு கொடுத்துள்ளார் என்றால் இல்லை. ராமபண்டாரம் மேற்படி 5 1/2 செண்ட் வண்டித்தடத்தை பணம் கொடுத்து வாங்கினாரா அல்லது அதற்கு இணையாக 16 1/2 செண்ட் பூமி கொடுத்து வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது. ஆவணத்தில் அது போன்று சரத்து இல்லை. எந்த ஆவணத்தில் மேற்சொன்னவாறு சரத்துக்கள் இல்லை என்றால் வில்லங்க நகலின் செக்குபந்தி விவரத்தில் இல்லை.

6. 1981 லிருந்து மேற்படி ராமபண்டாரம் மேற்படி 9 லிங்க்ஸ் அகல வண்டித்தடத்தின் மூலம் அவரது மேபுற பூமிக்கு சென்று அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 3 வது வாதி வடிவேல் எனது தகப்பனார் மற்றும் தாயாரான 1, 2 வாதிகளிடமிருந்து வா.சா.ஆ.3 ன் மூலம் இந்த தாவா காலையில் 1 ஏக்கர் 30 செண்ட் கிரயம் வாங்கியுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிழக்கில் உள்ள தென் வடல் ரோட்டிலிருந்து மேற்படி கிரய பூமியின் தென்புற ஓரத்தில் தென்வடல் 12 அடி அகலத்தில் கிழமேலாக மேற்கு நோக்கி எங்கள் வகையறா பூமி வரை செல்லும் வண்டிப்பாதையை உபயோகித்து கொள்ள 1, 2 வாதிகளுக்கு உரிமை உள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

7. தற்போது அந்த தடம் ஸ்தலத்தில் உள்ளதா என்றால் இல்லை அழித்துவிட்டார்கள். மேற்படி 12 அடி வண்டித்தடமானது மேற்படி 9 லிங்க்ஸ் அகல வண்டித்தடத்தையும் உள்ளடக்கியதா என்றால் ஆமாம். யார் எப்போது மேற்படி வண்டித்தடத்தை அழித்தார்கள் என்றால் 1, 2 பிரதிவாதிகள் 2017 ல் அழித்துவிட்டார்கள். மேற்சொன்னவாறு வண்டித்தடம் ஸ்தலத்தில் இருந்தது என்றும், மேற்படி வண்டித்தடத்தை 1, 2 பிரதிவாதிகள் அழித்து விட்டார்கள் என்றும் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் ஆமாம்.

8. வழக்குரையில் மேற்சொன்னவாறு வண்டித்தடம் இருந்தது குறித்தோ அதை 1, 2 பிரதிவாதிகள் அழித்தாதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது 3ம் வாதியான வடிவேல் எவ்வளவு விஸ்தீரணம் பூமியை தற்போது அனுபவித்து வருகிறார் என்றால் 2 ஏக்கர் பூமியை அனுபவித்து வருகிறார். அவர் 1 ஏக்கர் 30 செண்ட் பூமியை எனது பெற்றோரிடமிருந்து கிரயம் பெற்றுள்ள நிலையில் 2 ஏக்கர் பூமியை எவ்வாறு அனுபவித்து வருகிறார் என்றால் எனது பெற்றோரிடமிருந்து 2018 ல் மேலும் 70 செண்ட் பூமியை கிரயம் வாங்கி அனுபவித்து வருகிறார். மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. நான் இந்நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி 1 முதல் 3 வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் அனுபவித்து வரும் பூமிகளை சர்வேயர் மூலம் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய மனு செய்தேனா என்றால் ஆமாம். மேற்படி மனுவின் படி ஆணையர் நியமனம் செய்து சர்வேயருடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்தாரா என்றால் ஆமாம். ஆனால் முழுவதுமாக அளக்கவில்லை. மேற்படி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை இவ்வழக்கில் குறியீடு செய்யவில்லையா என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தை தற்போது குறியீடு செய்வதில் எனக்கு தற்போது ஆட்சேபணை இல்லை. மேற்படி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை **நீ.ம.சா.ஆ.1**, வரைபடம் **நீ.மா.சா.ஆ.2**, சர்வேயர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

10. சர்வேயர் மூலம் ஆணையர் பூமிகளை அளவீடு செய்யும் பொழுது நான் உடனிருந்தேனா என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் சர்வேயர் வரைபடமான நீ.மசா.ஆ.3 ல் பச்சை வண்ணமிட்ட பகுதியின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 90 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அது போன்று சிவப்பு வண்ணமிட்ட பகுதியை 1 ஏக்கர் 47 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்/

11. மேற்படி சிவப்பு வண்ணமிட்ட பகுதி 3ம் வாதியான எம். வடிவேலின் சுவாதீனத்தில் உள்ள பகுதி என்றால் சரிதான். ஆணையர் வந்து அளவீடு செய்து சென்ற பிறகு தான் எனது தகப்பனார் வழக்கு காலை எண்ணில் 70 செண்ட்டை கிரயம் கொடுத்தார். மேற்படி 70 செண்டானது சிவப்பு பகுதிக்கு வடபுறத்தில் கிரயம் கொடுக்கப்பட்ட சொத்தா என்றால் இல்லை. மேபுறத்தில் கிரயம் கொடுக்கப்பட்ட சொத்தாகும்.

12. ஆணையர் சர்வேயர் மூலம் அளந்த போது 3ம் வாதியான எம்.வடிவேலுக்கு வழக்கு காலை எண்ணில் 1 ஏக்கர் 30 செண்ட் தான் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது தந்தை பூமி என்பதால் 2 ஏக்கரை விவசாயம் செய்து வந்தார். மேற்படி வடிவேல் எனது தகப்பனாரின் மருமகன் ஆவார். சர்வேயர் அளந்த போது 1 ஏக்கர் 47 செண்ட் தான் 3ம் வாதியின் சுவாதீனத்தில் இருந்ததாக வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது தவறாகும். முழுதாக சொல்லவில்லை.
13. நான் சொல்வது போன்று ஆணையர் பூமிகளை அளந்த சமயத்தில் 3ம் வாதி 2 ஏக்கர் பூமியை அனுபவித்து வரவில்லை என்றும், அவருக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 30 செண்டை ஓட்டி தென்புறத்தில் இருந்த 12 அடி வண்டித்தடத்தை அழித்து அதையும் சேர்த்து ஓட்டி வந்ததால் தான் 3ம் வாதியின் சுவாதீனத்தில் 1 ஏக்கர் 47 செண்ட் இருந்த சங்கதி ஆணையர் அளவீடு செய்த போது தெரிய வந்தது என்று சொன்னால் சரியல்ல. வடிவேல் 2 ஏக்கர் பூமியை தான் ஓட்டி வந்தார் என்றும், 1.47 ஏக்கர் அவர்

சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றும், ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

14. 1, 2 பிரதிவாதிகள் அவர்களுடைய பூமியை யாரிடமிருந்து கிரயம் வாங்கினார்கள் என்றால் ஒரு முத்தாயாள் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார்கள். எப்போது என்று தெரியாது. எத்தனை ஏக்கர் பூமியை கிரயம் வாங்கினார்கள் என்றால் தெரியாது. மேற்படியார்கள் கிரயம் வாங்கிய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். ஆவணத்தின்படி எத்தனை ஏக்கர் பூமி கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால் 2 ஏக்கர் 15 செண்ட் பூமி. முத்தாயாள் கிரயம் வாங்கிய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வில்லங்கம் பார்த்துள்ளேனா என்றால் 1980 லிருந்து பார்த்துள்ளேன்.01.01.1980 லிருந்து பார்த்துள்ளேனா என்றால் தெரியவில்லை. மேற்படி வில்லங்க சான்று என்னிடம் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது.

15. அந்த வில்லங்க சான்றில் கடந்த 29.11.1982 ல் செவலையப்பனிடமிருந்து முத்தாயாள் 2 ஏக்கர் 15 செண்டை கிரயம் பெற்றது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு மேற்படி வில்லங்க சான்று எடுக்கப்பட்டது என்றால் எனது தகப்பனாருக்கு தான் தெரியும். மேற்படி ஆவணம் குறித்து தெரிந்து கொண்ட நிலையில் அதன் சான்று நகலை எடுத்து நான் பார்த்துள்ளேனா இல்லை என் தகப்பனார் பார்த்திருப்பார் அவருக்கு தான் தெரியும்.

16. மேற்படி முத்தாயாள் கிரயம் பெற்ற ஆவணத்திலேயே மேற்படி கிரய சொத்தான 2 ஏக்கர் 15 செண்ட்டிற்கு வடபுற எல்லையாக 9 லிங்க்ஸ் கிழமேல் வண்டித்தடம் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். செவலையப்பன் மேற்படி 9 லிங்க்ஸ் அகல வண்டித்தடத்திற்கு 5 1/2 செண்ட் பூமியை ராமபண்டாரத்திற்கு கொடுத்து விட்டு அதற்கு ஈடாக ராமபண்டாரம் அவரது பூமியில் செவலையைப்பனுக்கு கொடுத்த 16 1/2 செண்ட்டையும் சேர்த்து 2 ஏக்கர் 15 செண்டாக செவலையப்பன் முத்தாயாளுக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

17. முத்தாயாள் கடந்த 21.11.1982 ல் கிரயம் பெற்றதிலிருந்து 2 ஏக்கர் 15 செண்ட் பூமியை அனுபவித்து வந்தார் என்றும், மேற்படி பூமியை தான் 24.04.2006 தேதியில் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி முத்தாயாள் கிரயம் பெற்ற ஆவணமும் 1, 2 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற ஆவணமும் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். இவ்வழக்கில் கோரியுள்ளேன். முத்தாயாள் 2 ஏக்கர் 4 செண்டை தான் அனுபவித்து வந்தார்.

18. 11 செண்டை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். எப்போது யார் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் 2017 ஆம் ஆண்டில் 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தார்கள். முத்தாயாள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. முத்தாயாளே 21.11.1982 ல் 2 ஏக்கர் 15 செண்டை கிரயம் பெற்று மேற்படி இடத்தில் திறந்த விவசாய கிணறு தோண்டி ஓட்டுவீடு கட்டி அனுபவித்து வந்து அதை தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

19. நான் இதுவரை முத்தாயாள் பேரில் உள்ள கிரய ஆவணத்தையும், 1, 2 பிரதிவாதிகள் பேரில் உள்ள கிரய ஆவணத்தையும் செல்லாது என்று பரிகாரம் கோரி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்ல என்றால் சரியல்ல. முத்தாயாள் கிரயம் வாங்கிய பூமியின் வடபுறம் கிழமேல் எல்லையிலும், மேபுற தென்வடல் எல்லையிலும் நிரந்தர பொழி உள்ளது என்று சொன்னால் சரிதான். தற்போதும் ஸ்தலத்தில் மேற்சொன்னவாறு பொழி உள்ளது என்றால் இல்லை. ஆணையர் வந்து பார்க்கும் பொழுது மேற்சொன்ன பொழி இருந்தது என்றும் , தற்போது பொய்யாக இல்லை என்று சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

20. எங்களுடைய பூமி வடபுறத்திலிருந்து தென்புற சரிவாக உள்ளது என்றால் இல்லை மேபுற சரிவாக தான் உள்ளது. மேற்சொன்னவாறு எங்களது பூமி தென்புற சரிவாக உள்ளதால் 1, 2 பிரதிவாதிகளின் பூமியை விட ஆரம்பத்தில் 4 அடி தாழ்வாக இருந்து தெற்கே நோக்கி செல்லசெல்ல 1 அடி தாழ்வாகவும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. முதலில் மட்டமாக தான் இருந்தது. 2016 ல் நாங்கள் பூமியை நிரவும் போது தான் மேற்சொன்னவாறு பள்ளம் ஏற்பட்டுள்ளது.

21. 1, 2 பிரதிவாதிகள் எங்கள் பூமியை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக சொல்லும் நிலையில் எந்த பகுதியில் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் 3 ம் வாதிக்கு நாங்கள் கிரயம் செய்து கொடுத்த 1 ஏக்கர் 30 செண்ட் பூமிக்கு தென்புறத்தில் இருந்த 9 லிங்க்ஸ் வண்டித்தடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். எனது தகப்பனார் பூமிக்கு கிழபுறமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். மேற்படி பகுதி தான் நான் மேலே குறிப்பிட்ட 11 செண்ட் ஆகும். எனது வழக்குரையில் வடபுறத்தில் 9 லிங்க்ஸ் வண்டித்தடத்தையும் எனது தகப்பனாரின் பூமியின் கிழபுறத்தில் 11 செண்டை யும் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

22. எனது வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். எனது வழக்குரையில் சொத்து விவரத்தில் 3 வது இனமாக 1 வது இன சொத்தில் சுமார் 593 சதுர அடி அகலம் மற்றும் சுமார் 593 சதுர அடி நீளம் கொண்ட தென் வடல் பகுதியையும், 4 வது இனமாக

சொத்து விவரத்தில் 2 வது இன சொத்தில் சுமார் 593 சதுர அடி அகலம் மற்றும் சுமார் 593 சதுர அடி நீளம் கொண்ட கிழமேல் பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்ததாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றும் 593 சதுர அடி என்பது பரப்பளவிற்குரியது என்பதாலும், நீள அகலம் அல்ல என்பதாலும், நிலஅளவையர் சொத்து விவரம் குழப்பமாக உள்ளது என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

23. நான் சொல்வது போல் 1, 2 பிரதிவாதிகள் 1 முதல் 3 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியை எப்போதும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், அவர்கள் கிரயம் பெற்ற 2 ஏக்கர் 15 செண்ட் பூமியை தான் அனுபவித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. செவலையப்பன் 9 லிங்க்ஸ் அகல வண்டித்தடத்திற்கு ஈடாக கொடுத்த 16 1/2 செண்ட் பூமிக்கு ராமபண்டாரம் ஆவணம் எதுவும் செவலையப்பனுக்கு எழுதிக் கொடுக்காத காரணத்தை எங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டு 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

24. மேற்சொன்ன 16 1/2 செண்ட் பூமி 1, 2 வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று எடுத்து கொண்டாலும், 29.11.1982 தேதியிலேயே மேற்படி 16 1/2 செண்டையும் சேர்த்து முத்தாயாள் செவலையப்பனிடமிருந்து கிரயம் வாங்கி அனுபவித்து வந்து 24.04.2006 தேதியில் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்து அவர்களும் தொடர்ந்து நாங்கள் அறிய சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருவதால் 1, 2 பிரதிவாதிகளுக்கு மேற்படி 2 ஏக்கர் 15 செண்ட்டில் மேபுற 11 செண்ட் பூமியானது எதிர் அனுபோக பாத்தியத்தின் அடிப்படையில் அவர்களுக்கு பாத்தியம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

25. அதனால் நான் சொல்வது போன்று 2017 ல் 1, 2 பிரதிவாதிகள் எங்களுடைய பூமியை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், நான் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கோரியுள்ள எதிர்கோருரிமை பரிகாரமானது அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் எங்களது வழக்கு பொய் வழக்கு என்பதால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

PUSHPARAJ SHARMILA

Digitally signed by PUSHPARAJ SHARMILA
Date: 2024.12.05 20:18:09 +0000